## இந்தியா



# எங்கிருந்தோ கேட்ட சத்தம்

*“பரலோகத்திலிருந்துதான் அந்தச் சத்தம் பேசி, தன்னை ...போகச் சொன்னதாக நம்புகிறார்”.*

லிலியாவுக்கு தேவன்மீது நம்பிக்கை கிடையாது. விசுவாசம் பற்றி யோசித்ததும் கிடையாது. தேவன் மீது நம்பிக்கையற்ற அல்லது விசுவாசமற்ற ஒரு நாட்டில் வளர்ந்தாள். சோவியத் யூனியனில் வசித்தாள்.

அந்தச் சமயத்தில், எங்கிருந்தோ ஒரு சத்தம் கேட்கவே, ஆச்சரியமடைந்தாள்.

லிலியாவுக்கு 23 வயது; உஸ்பெகிஸ்தான் சோவியத் குடியரசின் தலைநகரான டாஸ்கென்டில் வீட்டில் தனியாக இருந்தாள்; அவளது கணவர் யூரி, வெளியூரில் இருந்தார்.

இரவும் பகலும் குடும்பப் பிரச்சினைகளைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தாள். அந்தக் கவலை இப்போதும் வந்தது; ‘வேறு இடத்திற்குச் செல்லவேண்டும்’ என்கிற எண்ணம் மனதிற்குள் உருவானது.

‘ஆம், உடனே குடிபெயரவேண்டும்’ என்று தனக்குள்ளாக தீவிரமாகச் சொல்லிக்கொண்டாள்.

அந்தச் சமயத்தில், அவளது தோளை யாரோ மெதுவாகத் தொடுவதுபோல இருந்தது. “அதுதான் சரியானத் தேர்வு” என்று மிகவும் மெல்லியக் குரலில் பேசியது.

லிலியா உடனே அறையைச் சுற்றிலும் பார்த்தாள். ஆனால் அவள் தனியாகத்தான் இருந்தாள், யாரும் இல்லை. அந்தக் குரல் மிகவும் மென்மையாக இருந்ததால், அவளுக்கு பயம் வரவில்லை. தானும் யூரியும் வேறு இடத்திற்குச் செல்லுவதற்கு அதுதான் ஆதாரம் என்பதை உணர்ந்துகொண்டாள்.

யூரி வீட்டிற்கு வந்தபிறகு,

வேறு இடத்திற்குச் சென்றுவிடலா மென லிலியா சொன்னாள்.

அந்தத் தம்பதியர், சோவியத் தின் வடக்கு ஓரத்திற்கு, ஆர்க்டிக் வட்டத்திற்கு அருகில் குடிபெயர்ந்து சென்றார்கள்.

அது ஆள் அதிகம் இல்லாத பகுதி; வேலை செய்யலாம், அக் கம்பக்கத்தினருடன் பேசலாம்; வேறு எதுவும் செய்யமுடியாது. லிலியாவும் யூரியும் வேலைசெய் தார்கள்; அக்கம் பக்கத்தினருடன் பேசினார்கள்; லியுபா மற்றும் வேலன் டின் என்கிற மற்றொரு திருமண மான தம்பதியருடன் நெருக்கமா னார்கள்.

வருடங்கள் கடந்தன; அவர்க ளுடைய நட்பு வளர்ந்தது. அந்தச் சமயத்தில் சோவியத் யூனியன் உடைந்தது. லையுபாவும் வேலன் டினும் வேறு இடத்திற்குச் சென்றார் கள். ஆனாலும் இரு தம்பதியரும் தொடர்பில் இருந்தார்கள். லையு பாவுக்கு வேதாகமக் காரியங்களில் ஆர்வம் உண்டானது; தான் கற்றுக் கொண்ட விஷயங்களை லிலியா வுடன் பகிர்ந்துகொண்டார்.

முதலாவது, வாரத்தின் எந்த நாள் தேவனுடைய உண்மையான ஓய்வுநாள் என்று அவருடைய மன தில் கேள்விகள் எழுந்திருக்கின் றன. அதுபற்றி சாமியாரிடம் பேசி, பதில் கேட்டபோது, ஞாயிறுதான் தேவனுடைய உண்மையான ஓய்வு நாள் என்பதற்கு வேதாகமத்திலி ருந்து அவரால் பதில் காட்டமுடிய வில்லை. அதனால் விரக்தியோடு தேவனை நோக்கி, 'தேவனை நீர் உண்மையாக இருந்தால், உம்மை எனக்கு வெளிப்படுத்தும், நான் உம்மை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்' என்று ஜெபித்தார்.

சில நாட்களுக்கு பிறகு, வேத ஆராய்ச்சி வகுப்புகள் குறித்து வீட் டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு விளம் பரத்தை ஒரு பேருந்து நிறுத்தத்தில் பார்த்தார். அந்த விலாசத்தைத் தேடிச் சென்றார்; அங்கிருந்த செவந்த்-டே அட்வென்டிஸ்ட் குழுவுடன் சேர்ந்தார். எந்த நாள் தேவனுடைய உண்மையான ஓய்வுநாள் என்கிற கேள்விக்கு வேதாகமத்திலிருந்து பதில்கள் கிடைத்தன; இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற் றார்.

தான் புதிதாகப் பெற்ற அந்த விசுவாசத்தைப் பற்றித்தான் லிலி யாவிடம் லையுபா சந்தோஷமாகப் பகிர்ந்துகொண்டார்.

லையுபா சொன்ன வேதாகமச் சத்தியங்களை லிலியா ஏற்றுக்கொண் டார். ஆனால் இன்னும் விசுவாசத் தில் தடுமாறினார். தேவனைத் தெரியவில்லை; அவரைப் பின்பற்ற வும் அல்லது ஓய்வுநாளைக் கைக் கொள்ளவும் காரணம் எதுவும் புரிய வில்லை.

பிறகு லையுபாவும் அவரது கணவரும் வேலை இழந்து, மிக வும் கஷ்டப்பட்டார்கள். அந்த மென் மையான குரலைக் கேட்டு, உஸ் பெகிஸ்தானை விட்டு வந்ததில், தாங் கள் ஏதும் தவறு செய்துவிட்டோ மோ என்று லிலியா யோசித்தாள்.

ஒருநாள், தெருவில் முன்பின் தெரியாத ஒரு நபரிடம் தன்னுடைய வாழ்க்கை பற்றிப் புலம்பிக் கொண்

டிருந்தார். அடுத்தநாள், முன்பின் தெரியாத நட்யா என்கிற அந்தப் பெண்மணி, தன் வீட்டில் விளைந்த உருளைக்கிழங்குகளையும் கேரட்டு களையும் பை நிறைய எடுத்துக் கொண்டு, லிலியாவின் வீட்டிற்கு வந்தார். லிலியாவுக்கு ஆச்சரிய மாக இருந்தது; அவருக்கு நன்றி சொல்லுகிற வகையில், தன்னிடமி ருந்த சிறிதளவு பணத்தால் மளிகை சாமான்களை வாங்கிக்கொண்டு, நட்யாவின் வீட்டிற்குச் சென்றார்.

இருவருக்குமிடைய நட்பு ஆழ மானது; தன்னைவிட நட்யா மிக வும் கஷ்டத்தில் இருந்ததை லிலியா அறிந்தாள். நட்யாவின் கணவர் ஒரு மாதத்திற்குமுன் மரித்திருந் தார்; அதனால் அவர் தன் 10 பிள் ளைகளையும் வளர்த்து, ஆளாக்க வேண்டியிருந்தது. ஆனாலும் நட் யாவின் வாழ்க்கையில் சந்தோஷ மும் சமாதானமும் நிறைந்திருந் தன. நட்யா ஒரு செவந்த் - டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவர் என லிலியா அறிந்தாள்.

இப்போது லிலியாவுக்கு இரு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் நண் பர்கள் இருந்தார்கள்; ஒன்று லை யுபா, இன்னொன்று நட்யா.

நட்யா லிலியாவுக்கு ஒரு வேதா கமத்தைக் கொடுத்தார்; லிலியா அதை வாசிக்க ஆரம்பித்தார்.

அந்தச் சமயத்தில், லையுபா வும் தன் ஆவிக்குரிய பயணத்தில் கவனம் செலுத்தி, அவரும் ஒரு வேதாகமத்தை அனுப்பி வைத்தார்.

இப்போது லிலியாவிடம் இரு வேதாகமங்கள் இருந்தன. வேதா கம சம்பவங்களை வாசித்தபோது, பிரமிப்பாக இருந்தது. ஆனாலும் அவருக்குள்ளாக விசுவாசம் வர வில்லை. தேவனை அறிந்திருக்க வும் இல்லை.

பிறகு லிலியாவைப் பார்ப்ப தற்கென்றே லையுபா வந்தார். அந் தப் பட்டணத்தில் புதிதாக ஆரம் பிக்கப்பட்டிருந்த செவந்த்-டே அட் வென்டிஸ்ட் சபைக்கு லிலியாவை அழைத்துச் சென்றார்; பிறகு, ஒவ் வோர் ஓய்வுநாளிலும் லையுபா ஆரா தனையில் கலந்துகொண்டார்.

லிலியா வயது முதிர்ந்து, பாட்டி யானார். ஓய்வுநாள் பிரசங்கங்களை ஆர்வமாகக் கேட்டார்; சபை மக்க ளோடு அன்பாகப் பழகினார். ஆனா லும் இன்னும் விசுவாசம் வரவில் லை; தேவனை அறிந்திருக்கவும் இல்லை.

அப்போதுதான் பெருந்துயரம் உண்டானது.

லிலியாவின் மகளுக்கு பிரவசத் திற்கு முன்னரே குழந்தை இறந்து போனது. பிறகு, இரண்டாவது முறையாக கர்ப்பமாகியிருந்த சம யத்திலும், கரு கலைந்தது. மூன் றாவது முறையாக கர்ப்பமானார்; ஆனால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. லிலியாவால் அமைதியாக இருக்க முடியவில்லை. "ஆண்டவரே, இந் தக் குழந்தையைக் காப்பாற்றும்! இவன் சாகக்கூடாது" என்று கதறி னாள். பிறகு, 'இந்தக் குழந்தை பிழைத்துக் கொண்டால், நான் உம் மை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நா னம் பெறுவேன்" என்று பொருத் தனை செய்தார்.

பல மாதங்களுக்கு பிறகு, நல்ல ஆரோக்கியத்துடன் ஒரு ஆண்குழந்

தை பிறந்தது; ஸ்டெபான் என்று பெயர் வைத்தார்கள். லிலியா தன் பொருத்தனையை மறக்கவில்லை. ஆறு மாதங்கள் கழித்து, ஞானஸ் நானம் பெற்றார்.

இன்று, லிலியாவின் உள்ளத் தில் விசுவாசம் பிறந்திருக்கிறது. தேவனை அறிந்திருக்கிறாள். பர லோகத்திலிருந்துதான் அந்தச் சத் தம்பேசி,தன்னைஉஸ்பெகிஸ்தானை விட்டுப் போகச் சொன்னதாக நம்பு கிறார். அங்கிருந்து கிளம்பியதால் தான், தன் அட்வென்டிஸ்ட் நண் பர்களான லையுபாவையும், நட்யா வையும் சந்திக்க முடிந்தது. அவ ருக்கு இரண்டு வேதாகமங்கள் கிடைத்தன; அவற்றை வாசிக்க ஆரம் பித்தார். அங்கிருந்து கிளம்பியதால் தான், தேவனில் விசுவாசத்தைக் கண்டுகொண்டார். உஸ்பெகிஸ்தா னில் அந்தச் சத்தத்தைக் கேட்டு, ரஷ்யாவின் தொலைதூர வடக்குப் பகுதியில் ஞானஸ்நானம் பெற்ற தற்கு இடையில் இருபத்தாறு வரு டங்கள் கடந்திருந்தன.

இன்று லிலியாவுக்கு 69 வய தாகிறது. தன் மகளுக்கு லையுபா என்று பெயர் வைத்திருந்தார். லையு பாவுடனும் தன் பத்து வயது பேரன் ஸ்டெபனுடனும் வாராவாரம் ஆல யத்திற்குச் செல்லுகிறார். தன் கண வரும் உறவினர்களும்கூட ஒருநா ளில் விசுவாசத்தை ஏற்றுக்கொள் வார்களென ஜெபித்து வருகிறார். தான் பெற்ற விசுவாசத்தை அவர் களும் பெறுவார்களென நம்புகிறார். இப்போது தேவனை அறிந்திருக் கிறார்; அவர் தன் ஜெபங்களைக் கேட்பதையும் அறிந்திருக்கிறார்.

ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ் கியில், சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியை ஆரம்பிப்பதற்கு மூன்று வருடங்களுக்குமுன் கொடுத்த பதின் மூன்றாம் வாரக் காணிக்கை உத வியது. இந்தக் காலாண்டு காணிக் கையின் ஒரு பகுதி, ரஷ்யாவின் வடக்கு ஓரத்தில் உள்ள ஸலேகார் டில் ஆவிக்குரிய மற்றும் சமுதாய மையம் ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பயன்படும். ஜூன் 29 ம் தேதி உதா ரத்துவமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

யூரோ-ஆசியா டிவிஷனில் மேலும் நான்கு திட்டங்களுக்கும் காணிக்கை பயன்படும்; அதில், அர்மீனியாவில் உள்ள யெரவனில் செல்வாக்கு மையம் ஒன்றும், பெல ராஸில் உள்ள மின்ஸ்கில் செல்வாக்கு மையமையம் ஒன்றும், ஜார்ஜியா விலுள்ள டஸ்கால்டுபோவில் ஒரு சுகாதார மையம் ஒன்றும், உஸ்பெ கிஸ்தானிலுள்ள டாஸ்கென்டில் முதன்முதலாகஒருஅட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியும்ஆரம்பிப்பதும் அடங்கும். அதன்மூலம் அங்குள்ள மக்கள் தேவனை அறிந்துகொள்ள முடியும். யூரோ-ஆசியா டிவிஷ னில் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு உதாரத்துவமாக காணிக்கை கொடுக் கப் போவதற்காக நன்றி.